

# ஒரு மு...
# சாதாரண கா...
# அடுப்புக் கரி சி...

**ஆர். நாகராஜன்**

*2010-11ஆம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை கடந்த வெள்ளியன்று மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இந்த பட்ஜெட்டில் கச்சா எண்ணெய், பெட்ரோல், டீசல் மீதான இறக்குமதி வரி 2.5 சதவீதத்தில் இருந்து 7.5 சதவீதமாக மும்மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. பெட்ரோல், டீசலுக்கு உற்பத்தி வரி லிட்டருக்கு ஒரு ரூபாயும், மற்ற அனைத்துப் பொருட்களுக்கும் உற்பத்தி வரி 2 சதவீதமும் உயர்த்தப்பட்டுள்ளது. அத்தியாவசியமற்ற பொருட்களான பலூன், மைக்ரோ ஓவன் போன்றவற்றுக்கு வரி சலுகைகள் அறிவித்திருப்பது நகைப்புக்கு உள்ளாகியிருக்கிறது. இந்த பட்ஜெட்டை தொழில் அமைப்புகள், தொழிலதிபர்கள், அரசியல் தலைவர்கள் ஆதரித்தும், எதிர்த்தும் கருத்துக்கள் கூறி வருகின்றனர். காங்கிரஸின் கூட்டணிக் கட்சிகளான தி.மு.க.வும், திரிணாமுல் காங்கிரஸும்கூட 'பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்க வேண்டும்' என்று கோரிக்கை வைத்திருக்கின்றன. எதிர்க்கட்சிகள் இதற்காக தனிப் போராட்டக் களத்தையே சந்திக்கத் தயாராகிக் கொண்டிருக்கின்றன.*

*அரசியல் கட்சிகளும், ஆளுங்கட்சியும் இப்படி வரிந்து கட்டிக் கொண்டு தங்கள் தரப்பு கருத்துக்களில் பிடிவாதமாக இருக்க, சமுதாயத்தில் உள்ள பல தரப்பட்ட மக்கள் இந்த மத்திய பட்ஜெட் பற்றி என்ன நினைக்கிறார்கள்? நாம் பல்வேறு தரப்பு மக்களையும் சந்தித்து கருத்துக் கேட்டோம்.*

**மதிவாணன்,**
***மினி டெம்போ வேன் உரிமையாளர்.***

ஒவ்வொரு மத்திய பட்ஜெட்டின் போதும் நடுத்தர மக்களும், அடித்தட்டு மக்களும்தான் பாதிக்கப்படுகிறார்கள். அப்படித்தான் இந்த பட்ஜெட் மூலமும் நாங்கள் பாதிக்கப்படுகின்றோம். காரணம், பெட்ரோல், டீசல் மீதான இறக்குமதி, உற்பத்தி வரிகள் உயர்ந்துவிட்டதால் அதன் விலை எகிறிவிட்டது. இதனால் அத்தியாவசியப் பொருட்களின் விலையும் ஏறுகிறது என்பதுதான் எங்கள் கவலையாக இருக்கிறது.

**சுதாகர்,**
***இரும்பு பைப் விற்பனையாளர்.***

மத்திய பட்ஜெட் ரொம்ப ரொம்பக் கேவலமாக இருக்கிறது. பெட்ரோல், டீசல் விலை ஏறினாலே, எல்லா பொருட்களின் விலையும் ஏறப்போகிறது என்பது தானே உண்மை. ஒரு பக்கம் விஷம் போல் ஏறும் விலைவாசியைக் குறைக்காமல், இப்படி பெட்ரோல், டீசல் விலையையும் ஏற்றுகிறார்கள். இன்னொரு பக்கம் விலைவாசியைக் குறைக்கப்போகிறோம் என்று ஆள்பவர்கள் சொல்கிறார்கள். இதற்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?

**ராஜா முகம்மது,**
***ஸ்டீல்ஸ் விற்பனையாளர்.***

மத்திய பட்ஜெட்டால் எந்தப் பொருளின் விலையும் குறையவில்லை. இப்போது விலை எகிறி உள்ள பெட்ரோல் முன்பு லிட்டர் 20 ரூபாயாகத்தான் இருந்தது. அதை இந்த அளவிற்கு ஏற்றியவரே மன்மோகன்சிங்தான். வருமானம் அதிகமிருக்கும் டெக்ஸ்டைல்ஸ் துறைக்கு ரூ.400 கோடி நிதி ஒதுக்குவது என்ன நியாயம்? பட்ஜெட்டால் அரசியல்வாதிகளுக்குத்தான் லாபம். பொதுமக்களுக்கு எந்தப் பலனும் இல்லை.



லட்சுமி பாலாஜி



அன்னலெட்சுமி

**நாகராஜ்,**
***காலணி கடை உரிமையாளர்.***

இந்த பட்ஜெட்டால் எல்லாமே விலை உயர்ந்ததுதான் மிச்சம். பெட்ரோல் விலை ஏறியவுடன் நாங்கள் வாங்கும் காலணியின் ரேட்டும் 5 ரூபாய் அதிகமாகிவிட்டது. இதனால், மக்களிடம் 10 ரூபாய் விற்ற சாதாரண காலணியை 15 ரூபாய்க்கு விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. வரவைவிட செலவு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு எந்த ஆட்சியாளர்களும் நல்ல தீர்வை எடுப்பதில்லை. இந்நிலையில் இந்த பட்ஜெட் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இல்லை.

**கண்ணன்,**
***இளநீர் கடை ஊழியர்.***

மத்திய பட்ஜெட் பற்றியெல்லாம் என